இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 270 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 29 – செவ்வாய்க்கிழமை 12 மே 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 270 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 29 - Tuesday 12 May 2026 - Dak 8 Pages ₹ 5.00

### தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட பேரவை உறுப்பினர்கள் பதவியேற்பு!

## தற்காலிக சபாநாயகர் முன் பதவியேற்றனர்!



கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், துணைத் தலைவர் கே.என்.நேரு மற்றும் கொறடா எ.வ.வேலு ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் பி.கே.சேகர்பாபு உள்ளார்.

**சென்னை, மே 12-**

**தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டம் நேற்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. தி.மு.க. சட்டமன்றக் குழுத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பதவி ஏற்றுக் கொண்டனர்.**

சட்டமன்ற உறுப்பினராக பதவி ஏற்கும் முன்னர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துப் பெற்றார்.

சட்டப் பேரவையில் முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தனித்தனியாகப் பதவி ஏற்றுக் கொண்டனர். காலை 9.30 மணிக்குத் தொடங்கிய பதவி ஏற்பு நிகழ்ச்சி 4 மணி நேரம் நீடித்தது.

ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு தேர்தல் நடைபெற்றது. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, எடப்பாடி பழனிசாமி தலைமையில் என்.டி.ஏ. அணி, ஜோசப் விஜய்யின் த.வெ.க.வும், சீமானின் நாம் தமிழர் கட்சி என நான்கு முனைப் போட்டி இருந்தது.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான 234 தொகுதிகளில் நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் இம்மாதம் 4ஆம் தேதி எண்ணப்பட்டன.

அதில் தி.மு.க. கூட்டணி 74 தொகுதிகளிலும், அ.தி.மு.க. கூட்டணி 53 தொகுதிகளிலும், த.வெ.க. 108 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. 118 தொகுதிகளில் வெற்றி பெற்றால்தான் ஆட்சி அமைக்க முடியும் என்கிற நிலையில், யாருக்கும் அறுதி பெரும்பான்மை இல்லாத காரணத்தால் ஆட்சி அமைப்பதில் இழுபறி இருந்து வந்தது.

நான்கு நாட்கள் இழுபறி நீடித்த நிலையில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சிலவற்றின் ஆதரவுடன் த.வெ.க. தலைவர் ஜோசப் விஜய்க்கு ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுத்தார். அதையடுத்து நேற்று முன்தினம் ஜோசப் விஜய் முதலமைச்சராகவும் ஒன்பது பேர் அமைச்சர்களாகவும் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் எடுத்துக் கொண்டனர்.

இந்நிலையில் நேற்று தமிழ்நாடு சட்டமன்றம் கூடியது. முதலமைச்சரும் அமைச்சர்களும் தேர்வான உறுப்பினர்களும் தற்காலிக சபாநாயகர் முன் பதவி ஏற்றுக் கொண்டனர்.

தி.மு.க. சட்டமன்றக்குழு துணைத் தலைவர் கே.என்.நேரு, தி.மு.க. சட்டமன்ற கொறடா எ.வ.வேலு ஆகியோரும் உறுப்பினர்களாக பதவியேற்றனர். தொடர்ந்து, இ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ரகுபதி, அனிதா ராதாகிருஷ்ணன், ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, செந்தில் பாலாஜி, கோவி.செழியன், சிவசங்கர், சேகர்பாபு, மெய்யநாதன், சி.வி.கணேசன், ஓ. பன்னீர்செல்வம் உள்ளிட்டோரும் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

இதனிடையே, அ.தி.மு.க. மற்றும் த.வெ.க. உறுப்பினர்கள் சிலர், தேர்தல் வெற்றிச் சான்றிதழை எடுத்து வராததால் நேற்று பதவியேற்க இயலவில்லை.

அதேபோன்று, அ.தி.மு.க.வைச் சேர்ந்த சி.வி.சண்முகம், கருப்பண்ணன் ஆகியோர் உறுப்பினர்களாக பதவியேற்கவில்லை. மேலும், ஏற்காடு தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் உஷா ராணி, சான்றிதழை மாற்றி எடுத்து வந்ததால், அவரும் நேற்று பதவியேற்கவில்லை.

# நாட்டிற்கு ஒரே ஒரு நெருக்கடி பா.ஜ.க. மட்டுமே !

### சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் குற்றச்சாட்டு!

லக்னோ, மே 12 –

நாட்டிற்கு ஒரே ஒரு ‘நெருக்கடி’ பா.ஜ.க. மட்டுமே என சமாஜ்வாதி கட்சித்தலைவர் அகிலேஷ் யாதவ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அகிலேஷ் யாதவ், ஐந்து மாநில தேர்தல்கள் முடிவடைந்த உடனேயே, நெருக்கடி குறித்து பா.ஜ.க. பேச தொடங்கி விட்டதாக புகார் கூறியுள்ளார். ஆனால் நாட்டிற்கு ஒரே ஒரு நெருக்கடி பா.ஜ.க. மட்டும்தான் என சமாஜ்வாதி கட்சித்தலைவர் அகிலேஷ் யாதவ் குற்றஞ்சாட்டியுள்ளார்.



பா.ஜ.க. அரசின் கைகளிலிருந்து ஆட்சிப் பொறுப்பின் கடிவாளம் முழுமையாக நழுவிவிட்டது போலவே தோன்றுவதாகவும், டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அதலபாதாளத்தை நோக்கிச் சீறிப் பாய்கிறது என்றும் அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார். தங்கம் வாங்க வேண்டாம் என்ற வேண்டுகோளைப் பொது மக்களிடம் விடுக்கக் கூடாது என்றும் அகிலேஷ் யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க.வினர் தங்களின் கருப்புப்பணத்தை தங்கமாக மாற்றி அதிக அளவில் குவித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் தட்டுப்பாடு குறித்து ஐந்துமாநில தேர்தலுக்கு பிறகுதான் நினைவுக்கு வந்ததா என்றும், தேர்தல்களின்போது, பா.ஜ.க.வினர் பயன்படுத்திய ஆயிரக்கணக்கான தனி விமானங்கள் தண்ணீரில் இயக்கப்பட்டதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். கலாச்சார, மத, அரசியல், சமூக மற்றும் பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் பா.ஜ.க. நாட்டைச் சீரழித்துள்ளது என்றும், பா.ஜ.க.வின் கதை முற்றிலுமாக முடிந்துவிட்டது எனவும் சமாஜ்வாதி கட்சித்தலைவர் அகிலேஷ் யாதவ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

**பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும்!**

இதனிடையே, ஓராண்டுக்குதங்கம்வாங்கக்கூடாது என்ற பிரதமர் மோடியின் அறிவிப்பு பெரும் பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும் என்று தங்க நகை விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் தங்கநகை வியாபாரம் ஆண்டுக்கு 7 லட்சம் கோடியாக உள்ளது. இதனை நம்பி ஆயிரக்கணக்கான தங்க நகை உற்பத்தியாளர்கள் வியாபாரிகள் உள்ளனர்.

இந்நிலையில், பிரதமரின் ஓராண்டுக்கு தங்கம் வாங்க கூடாது என்ற திடீர் அறிவிப்பு தங்க நகை தொழிலை கடுமையாக பாதிக்கும் என்று தங்க நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பை திரும்ப பெற வேண்டும் என்று வலியுறுத்தி நாளை பிரதமர் அலுவலக அதிகாரிகளை சந்திக்க நேரம் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகத்தில் கோரிக்கை மனு வழங்கவும் தங்க நகை விற்பனையாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

## குஜராத்தில் பிரதமர் மோடி ரோடு ஷோ நடத்தியதில் சர்ச்சை!

சோம்நாத், மே12–

எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று கூறிவிட்டு, குஜராத்தில் பிரதமர் மோடி பங்கேற்கும் நிகழ்ச்சியில், ரோடு ஷோவுக்கு ஏராளமான கார்கள் பயன்படுத்தப்பட்டு ஒத்திகை நடைபெற்றது விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெட்ரோல், டீசல், கேஸ் போன்ற இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலிய பொருட்களை தேவைக்கேற்ப மட்டுமே சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்நிலையில், குஜராத் மாநிலத்தில் உள்ள சோம்நாத் கோவிலில், அம்ருத் மகோத்சவ நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி பங்கேற்ற நிலையில், அங்கு கார்களின் அணிவகுப்பை நடத்தியுள்ளார். இதற்காக நடைபெற்ற ஒத்திகை நிகழ்ச்சியில் ஏராளமான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என கூறிய பிரதமர் மோடி, ரோடுஷோ மற்றும் அதற்கான ஒத்திகையை நடத்தியுள்ளது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

### போர் பதற்றத்துக்கு மத்தியில்

# அமெரிக்க அதிபர் டிரம்ப் சீனா பயணம்!

*வாஷிங்டன், மே 12-*

*போர் பதற்றத்துக்கு மத்தியிலும் சீனாவுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பயணம் மேற்கொண்டுள்ளார்.*

*அமெரிக்க அதிபர் டிரம்ப், வரும் 13 முதல், 15ந்தேதி வரை சீனாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ள உள்ளார். 9 ஆண்டுகளுக்கு பின் அமெரிக்க அதிபர் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த சந்திப்பின் போது டிரம்ப், சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.*

*தொடர்ந்து நீடித்து வரும் அமெரிக்க, இஸ்ரேல்ஈரான் போர், ஹார்முஸ் ஜலசந்தி மீதான முற்றுகையால் ஏற்பட்ட உலகளாவிய எரிசக்தி நெருக்கடி மற்றும் தைவான் உட்பட பிரச்சினைகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றத்துக்கு மத்தியில் பயணம் நடைபெறுகிறது.*

*டிரம்பின் சுற்றுப்பயணத்தின்போது, நாடுகளுக்கு இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.*

# ‘நீட்’ தேர்வு வினாத்தாள் மோசடி!

### ரூ.5 லட்சம் வரை விற்றதாக தகவல்!

*சிகார், மே 12-*

*நீட் வினாத்தாள் கசிந்தது தொடர்பான விசாரணையில், கேரளாவில் மருத்துவக் கல்வி பயின்று வரும் ராஜஸ்தானைச் சேர்ந்த மாணவருக்கு தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.*

*கடந்த 3 ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வின் போது வினாத்தாள் கசிந்ததாக சந்தேகம் எழுந்துள்ளது. ராஜஸ்தான், உத்தரகாண்ட், மகாராஷ்டிரா மாநிலங்களில் சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்ட வினாத்தாள் மாதிரிகள் நீட் கேள்வித்தாளுடன் பெருமளவுக்கு ஒத்துப்போவதும், மொத்த மதிப்பெண் 720, அதில் 600 மதிப்பெண்ணுக்கான கேள்விகள் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதும் தெரியவந்துள்ளது. ராஜஸ்தானின், சிகாரில் தேர்வுக்கு முதல் நாள், மாதிரி கேள்விகள் என்ற பெயரில் 5 லட்சம் ரூபாயும், தேர்வுக்கு சில மணி நேரம் முன்பு 30 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டதும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனிடையே, கேரளாவில் மருத்துவ கல்வி பயின்று வரும் ராஜஸ்தானை சேர்ந்த மாணவருக்கும் தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சுரு மாவட்டத்தை சேர்ந்த அந்த மாணவர், மே 1ஆம் தேதி தனது நண்பருக்கு வாட்ஸ்அப் மூலம் ஒரு ‘வினா வங்கியை’ அனுப்பியதாக கூறப்படுகிறது. கையெழுத்து பிரதியில் இருந்த 140க்கும் மேற்பட்ட கேள்விகள் உண்மையான தேர்வு வினாத்தாளுடன் ஒத்துப்போவதாக புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன.*

# வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி!

### இந்திய வானிலை மையம் தகவல்!

*சென்னை, மே 12 -*

*தென்மேற்கு வங்கக் கடலில், இலங்கை மற்றும் மன்னார் வளைகுடாவை ஒட்டிய பகுதியில், நேற்று (மே 11, 2026) புதிய குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது அடுத்த 48 மணி நேரத்தில் வலுவடைந்து, தமிழகத்தின் கடலோர மற்றும் உள் மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்ய வழிவகுக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*தமிழ்நாட்டில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், ராமநாதபுரம், நெல்லை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் இன்று பலத்த காற்றுடன் கனமழைக்கு பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. மேலும் தெற்கு உள்கர்நாடகா மற்றும் தமிழ்நாடு வழியாக வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதாகவும் இதன் காரணமாக தமிழ்நாட்டில் வரும் மே 16ம் தேதி(சனிக்கிழமை) வரை மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இன்று இடி மின்னல் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என கூறப்பட்டுள்ளது. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் நாளையும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*